**செய்தி வெளியீடு எண்:743** **நாள்: 03.11.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் ஆணைக்கிணங்க சென்னையில் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு சீரமைப்புப் பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் மழைக்காலங்களில் நியாயவிலைக் கடைகளில் பொருட்களை பாதுகாப்பாகவும், சுத்தமாகவும் வைத்து தரம் குறையாமல் தங்குதடையின்றி பொதுமக்களுக்கு வழங்குவது குறித்து கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு.

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் இன்று **(3.11.2017)** மழைக்காலங்களில் நியாயவிலைக் கடைகளில் பொருட்களை பாதுகாப்பாகவும், சுத்தமாகவும் வைத்து தரம் குறையாமல், பொதுமக்களுக்கு தங்குதடையின்றி வழங்குவது குறித்து கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது, இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா வழியில் செயல்படும் இவ்வரசு விவசாயிகள், ஏழை, எளிய நடுத்தர மக்கள் என பல்வேறு தரப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்திட பல்வேறு நலத்திட்ட நடவடிக்கைகள் எடுத்து செயல்படுத்தி வருகிறது.

கூட்டுறவுத்துறை அடித்தட்டு மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றிடும் வகையில் பொதுவிநியோகத் திட்டத்தின் மூலம் அத்தியாவசியப் பொருட்களை வழங்கி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமன்றி கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க்கடன், நகைக்கடன், மகளிர் கடன், சிறு வணிகக் கடன், மாற்றுத்திறனாளிகளுக்கான கடன், வீடு கட்ட கடன் என பல்வேறு வகையான கடன்கள் வழங்கி வருவதுடன், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான உரம் மற்றும் இடுபொருட்களை விற்பனை செய்து வருகிறது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை வெள்ளத்தின் போது, கூட்டுறவுத் துறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சீர்செய்யப்பட்டன. இந்நிலையில் தற்போது பெய்துவரும் மழையின் பாதிப்பு ஏற்படாதவண்ணம் தாழ்வான பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகளை மேட்டுப்பகுதிகளுக்கு மாற்றவும், நியாயவிலைக் கடைகளில் உள்ள பொருட்களை பாதுகாப்பாகவும், சுத்தமாகவும் வைத்து பொதுமக்களுக்கு தரமாக விநியோகம் செய்யவும், மழையினால் ஏற்பட்ட சேதாரங்களை கண்காணிக்க வேண்டும். மழைகாலத்தில், நியாயவிலைக் கடைகள் தொடர்பான குறைகளை தெரிவிக்கவும் மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு காய்கறி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கவும், அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தை தடுக்கும் வகையில், தேவைப்படும் இடங்களில் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் ஏற்படுத்துதல் மற்றும் வெங்காயம் போன்ற காய்கறிகளை மொத்த விலைக்கு கொள்முதல் செய்து இருப்பு வைத்தல் போன்ற முன்னேற்பாடுகள் குறித்தும் துறை அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இந்த ஆண்டு ரூ.7000 கோடி பயிர்க்கடன் இலக்கை முழுமையாக எய்தவும், உரம் மற்றும் இடுபொருட்கள் இருப்பு வைத்து வழங்குதல் உள்ளிட்ட பணிகளை கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் நிர்வாகிகள் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். பயிர்காப்பீடு செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய தொகையினை காலதாமதமின்றி பெற்று வழங்கப்படவேண்டும். இதில் எவ்வித குறைபாடும் ஏற்படாத வண்ணம் தங்கள் கீழ் பணியாற்றும் ஊழியர்களை கண்டிப்புடன் பணியாற்ற உத்தரவிட்டு செயலாற்ற வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜெயந்த்,இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. அ.ஞானசேகரன்,இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.ஜி.கே.அருண் சுந்தர் தயாளன், இ.ஆ.ப., முனைவர் க.ராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், டாக்டர் நா.வில்வசேகரன், திரு.பா.பாலமுருகன், திருமதி வீ.தேவகி, திரு.கே.ஜி.மாதவன் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மண்டலங்களைச் சேர்ந்த, கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர்கள் மற்றும் துணைப்பதிவாளர்கள் கலந்துகொண்டனர்.

***********

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**